# மார்ச் - 16 - வெள்ளி

துாய ஆபிரகாம்

**நீதிமான்கள் மன்றாடும்போது, ஆண்டவர் செவிசாய்க்கின்றார்: திபா. 34:17**

## முதல் வாசகம் : சாலமோனின் ஞானம் 2 : 1,12 - 22

இறைப்பற்றில்லாதவர்கள் தவறாகக் கணித்து உள்ளத்தில் பின்வருமாறு சொல்லிக் கொண்டார்கள் "நம் வாழ்வு குறுகியது துன்பம் நிறைந்தது. மனிதரின் முடிவுக்கு மாற்று மருந்து எதுவுமில்லை. கீழுலகிலிருந்து யாரும் மீண்டதாகக் கேள்விப்பட்டதில்லை. நீதி மான்களைத் தாக்கப் பதுங்கி யிருப்போம் ஏனெனில் அவர்கள் நமக்குத் தொல்லையாய் இருக்கிறார்கள் நம் செயல்களை எதிர்க்கிறார்கள் திருச்சட்டத்திற்கு எதிரான பாவங்களுக்காக நம்மைக் கண்டிக்கிறார்கள். நற்பயிற்சியை மீறிய குற்றங்களை நம்மீது சுமத்துகிறார்கள். கடவுளைப்பற்றிய அறிவு தங்களுக்கு உண்டு என அவர்கள் பறைசாற்றுகிறார்கள் ஆண்டவரின் பிள்ளைகள் எனத் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். அவர்களது நடத்தையே நம் எண்ணங்களைக் கண்டிக்கிறது. அவர்களைப் பார்ப்பதே நமக்குத் துயரமாய் உள்ளது. அவர்களது வாழ்க்கை மற்றவர் வாழ்க்கையினின்று வேறுபட்டது அவர்களுடைய வழிமுறைகள் மாறுபட்டவை. இழிந்தோர் என நம்மை அவர்கள் எண்ணுகிறார்கள் தூய்மையற்ற பொருளினின்று ஒதுங்கிச் செல்வதுபோல நம்முடைய வழிகளினின்று விலகிச் செல்கிறார்கள் நீதிமான்களின் முடிவு மகிழ்ச்சிக்குரியது எனக் கருதுகிறார்கள் கடவுள் தம் தந்தை எனப் பெருமை பாராட்டுகிறார்கள். அவர்களுடைய சொற்கள் உண்மையா எனக் கண்டறிவோம் முடிவில் அவர்களுக்கு என்ன நிகழும் என ஆய்ந்தறிவோம். நீதிமான்கள் கடவுளின் மக்கள் என்றால், அவர் அவர்களுக்கு உதவி செய்வார் பகைவரிடமிருந்து அவர்களை விடுவிப்பார். அவர்களது கனிவினைக் கண்டுகொள்ளவும், பொறுமையை ஆய்ந்தறியவும், வசைமொழி கூறியும் துன்புறுத்தியும் அவர்களைச் சோதித்தறிவோம். இழிவான சாவுக்கு அவர்களைத் தீர்ப்பிடுவோம் ஏனெனில் தங்கள் வாய்மொழிப் படி அவர்கள் பாதுகாப்புப் பெறுவார்கள். இறைப்பற்றில்லாதவர்கள் இவ்வாறு எண்ணி நெறி தவறிச்சென்றார்கள். அவர்களின் தீயொழுக்கமே அவர்களைப் பார்வையற்றோர் ஆக்கிவிட்டது.

**பதில்பாடல் :** உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கிறார்

## நற்செய்தி : யோவான் 7 : 1 – 2, 10, 25 - 30

அக்காலத்தில் இயேசு கலிலேயாவில் நடமாடிவந்தார். யூதர்கள் அவரைக் கொல்ல வழிதேடிக் கொண்டிருந்ததால் அவர் யூதேயாவில் நடமாட விரும்பவில்லை. யூதர்களின் கூடார விழா அண்மையில் நிகழவிருந்தது. தம் சகோதரர்கள் திருவிழாவிற்குப் போனபின் இயேசுவும் சென்றார். ஆனால் அவர் வெளிப்படையாக அன்றி மறைவாகச் சென்றார். எருசலேம் நகரத்தவர் சிலர், "இவரைத்தானே கொல்லத் தேடுகிறார்கள்? இதோ! இங்கே இவர் வெளிப்படையாய்ப் பேசிக்கொண்டிருக்கிறாரே! யாரும் இவரிடம் எதுவும் சொல்லவில்லையே! ஒருவேளை இவரே மெசியா என்று தலைவர்கள் உண்மையாகவே உணர்ந்துகொண்டார்களோ? ஆனால் மெசியா எங்கிருந்து வருவார் என்பது யாருக்கும் தெரியாமல் அல்லவா இருக்கும்! இவர் எங்கிருந்து வருகிறார் என்பது நமக்குத் தெரியுமே" என்று பேசிக் கொண்டனர். ஆகவே கோவிலில் கற்பித்துக் கொண்டிருந்தபோது இயேசு உரத்த குரலில், "நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன் என்பவை உங்களுக்குத் தெரியும். ஆயினும் நானாக வரவில்லை. என்னை அனுப்பியவர் உண்மையானவர். அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்கு அவரைத் தெரியும். நான் அவரிடமிருந்து வருகிறேன். என்னை அனுப்பியவரும் அவரே" என்றார். இதைக் கேட்ட அவர்கள் இயேசுவைப் பிடிக்க முயன்றார்கள். எனினும் அவருடைய நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைத் தொடவில்லை.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்களானது இயேசுவில் இறைப்பற்றுக் கொண்டு வாழாதவர்களின் வாழ்வானது துன்பமும். துயருமும் வேதனையும் எமது வாழ்நாள் பூராவும் தொடர்ந்து கொண்டே இருக்கும், அவர்களது வாழ்க்கையானது மாறுபட்டதாகவே காணப்படும் என்று இன்றைய வாசகங்கள் தெரிவிக்கின்றன. ஆம், இன்று நாங்கள் கூட தவக்காலத்தில் தினமும் சிலுவைப்பாதை செய்கின்றோம், உபவாசம் இருக்கின்றோம், திருப்பலிக்கு செல்கிறோமே தவிர எமது வாழ்வில் மாற்றம் என்பதறங்கு இடமேயேயில்லை. ஆனால் நாங்கள் மனமாற வேண்டும், ஒரு மனிதனாக மாறவேண்டும் என்பதை அவர் விரும்புகிறார். நற்செய்தி வாசகத்தில் இயேசு ஓய்வு நாளில் நோயாளர்களை குணமாக்கியதை, நற்செய்தி போதனை போதித்ததை யூதர்கள் குறைகூறும் நோக்குடன் அவர் மேல் குற்றம் கூறுகின்றார்கள். ஆனால் அவர் தொடர்ந்தும் தந்தையின் சித்தத்திற்கும் ஏற்றபடி நிறைவேற்றுகின்றார். இன்று எங்ளை தெரிந்தெடுத்து நாட்கள் நேரங்கள் பார்க்காமல் எவ்வேளையிலும் நோயாளிகளைக் குணப்படுத்தவும், நற்செய்திகளை அறிவிக்கவும், பிறருக்கு உதவி செய்யுங்கள் என்றே அவர் கூறுகின்றார். அவ்வாறு செயற்பட்டால் நாங்கள் அவர் மேல் இறைப்பற்று கொண்டவர்களாக வாழ்வோம். எனவே நாங்கள் இறைவன் எமக்கு கொடுத்த அனைத்து தாலந்துகளை நல்ல முறையில் பயன்படுத்தி இறைவன்மேல் பற்றுறுதி கொண்டவர்களாக வாழ எங்களைத் தயார் படுத்துவோம்.